[29th March 1961

SRI V. K. KOTHANDARAMAN : பிடிபட்டுள்ளது மாத்திரம் 6,52,125 ரூபாய் சரகசு பிடிபடாதது எத்தனை லட்சமோ ? சொல்ல முடியாது. கள்ளக்கடத்தலால் ரொம்பக் குறைந்த விலையில் சாமான்கள் கிடைக்கும் நிலைமை இருப்பதால்தான் அந்த நிலைமை. குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடிய சாமான்களை நம் சர்க்காரே இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் அளவிற்கு ஏற்பாடு செய்தால் இது போன்ற நிலைமை ஏற்படாது என்பதை சர்க்கார் உணருகிறார்களா ? அப்படியானால் அதைச் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இதிலே கஸ்டம்ஸ், எக்ஸைஸ் எல்லாம் இருக்கிறது. எதை ஏற்றுமதி செய்தாலும் கஸ்டம்ஸ் வரி எக்ஸைஸ் வரி போட்டு, அதையும் அதன் விலையோடு சேர்த்து விறக, படுகிறது. கஸ்டம்ஸை ஏமாற்றி, எக்ஸைஸ் வரியை ஏமாற்றி சுலபமாக லாபம் சம்பாதிக்க இது நடத்தப்படுகிறது. அப்படி கஸ்டம்ஸ் வரியை ஏமாற்றி நாம் குறைந்த விலையில் திருட்டுத்தனமாக வாங்க வேண்டும் என்ற மனப்பான்மை இருக்கிறது. வாங்குகிறவர்கள் தயாராக இல்லாம லிருந்தால் இந்தக் கள்ளக்கடத்தல் இருக்காது. அவைகளை வாங்குவதால் தான் இந்தக் கள்ளக்கடத்தல் இருக்கிறது.

SRI S. RANGANATHA MUDALIAR : Sir, it is understandable if smuggled goods are seized in sea-coast towns but it is not understandable how smuggled goods travel so far into the interior places like Madurai and Salem?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is quite possible and probable that certain smuggled goods from Ceylon are brought by sea through illicit traffic and then they are carried away illicitly to certain towns and certain centres. The Police are trying to trace it. They trace it at a later stage and thus they catch them at various towns and places.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்தக் கள்ளக்கடத்தல் காரர்களைப் பிடிப்பதற்காக கடலில் ஸ்டீம் லான்சுகள் முன்பு வைக்கப் பட்டிருந்தன. அவை ஏன் இப்போது எடுக்கப்பட்டுவிட்டது ? அவை இப்போது இல்லாத காரணத்தினால் கள்ளக்கடத்தலில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டு, பணம் வருகின்ற காரணத்தினால் மக்களுடைய வாழ்க் கையில் டீ-மாரலிசேஷன் நிலைமை ஏற்படுகிறதே, அதைத் தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமை அல்லவா ? அந்தத் துறையிலே என்ன முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதெல்லாம் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு என்று. அவர்களுடைய இலாகா தான் இவைகளை கவனித்துக்கொண்டு வருகிறது. அதோடு இந்த அரசாங் கத்தின் போலீஸ் இலாகாவும் கவனித்து என்னென்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்துகொண்டு வருகிறது. ஆகவே இதற்குமேல் ஏதாவது வேண்டுமென்றால் அந்தக் கேள்வியைப் பார்லிமெண்டில் கேட்க வேண்டும்.

Kallanai-Anikkarachattiram Road (metalling)

*1158 *Q.*—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்லணையிலிருந்து கொள்ளிடம் தெற்குக் கரையில் ஆணிக்காரச் சத்திரம் வரையில் சாலைக்குக் கப்பிபோட உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் எப்போது அவ் வேலை ஆரம்பிக்கப்படும் ?

29th March 1961]

The Hon. Sri P. KAKKAN : The work is not included in any approved programme at present.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார் கல்லணையிலிருந்து ஆணிக்காரச் சத்திரம் வரையில் கொள்ளிடத்தின் தெற்குக் கரையில் சில இடங்களில் போக்கு வரத்து வசதியும் சில இடங்களில் போக்கு வரத்து வசதி தடைப்பட்டும் இருக்கிற காரணத்தினால், அங்கு கப்பி போட்டாவது ஒரு நிரந்தரமான போக்குவரத்தை உண்டாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ? இந்தக் குறை மக்களிடத்திலே நெடுங்காலமாக இருந்து வருவதால் இதை உடனடியாக எடுத்துக்கொண்டு செய்வார்களா ?

The Hon. Sri P. KAKKAN : ஏற்கனவே கொள்ளிடத்தின் வடக்குக் கரையிலே லோயர் அணைக்கட்டிலிருந்து கடற்கரை வரையிலும் ரூ. 8,75,000 செலவிலே நல்ல முறையில் ரோடு செப்பனிடப்பட்டு போக்குவரத்து வசதியை அரசாங்கம் செய்திருக்கிறது. அதனால் இது இப்போது தேவையில்லை என்று நினைக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்கனவே இரு கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார். அவைகளும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

Sri T. K. SUBBIAH : கொள்ளிடக் கரையிலே சில பகுதிகளில் கிராமப் பஞ்சாயத்துக்கள் ஒரு கிராமத்திலிருந்து, இன்னொரு கிராமத்திற்கு வட்டார வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் மான்யத்தைக் கொண்டும், பஞ்சாயத்து நிதியைக் கொண்டும் போக்குவரத்து வசதி ஏற்படுத்திக்கொள்ள அனுமதி கேட்டால், அதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

The Hon. Sri P. KAKKAN : அதைப்பற்றி பரிசீலனை செய்துதான் சொல்ல வேண்டும்.

Officers under suspension (Nagercoil Municipal Office)

*1159 *Q.*—Sri T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number and designation of officers kept under suspension in the Nagercoil Municipal Office during the months of November and December 1960; and

(*b*) the reasons therefor?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) No member of the staff of the Nagercoil Municipality was kept under suspension during November 1960. During December 1960, one Revenue Inspector, one peon and one bill-collector were kept under suspension.

(*b*) A Revenue Inspector and a peon were kept under suspension for their alleged misbehaviour towards a member of the public within the premises of the Municipal office on 30th November 1960. A bill-collector was kept under suspension on a charge of misappropriation of municipal funds.

Sri T. S. RAMASWAMY : May I know whether these people have been reinstated and if so, for what reasons? Also may I know whether any departmental enquiry was made and if so, the result of that enquiry?